தினமணி

06.04.2024 – Chennai Edition

# சிறந்த செவிலியர் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

**சென்னை, ஏப். 5:** சிறந்த செவிலியர் விருதுகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக 'ட்வின்டெக் ஹெல்த்கேர் அகாதெமி' தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அகாதெமியின் இயக்குநர் டாக்டர் அ.மகாலிங்கம் வெளியிட்ட அறிவிப்பு:

உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு, தமிழகத்தில் சிறப்பாக சேவையாற்றிய செவிலியர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

அதன்படி, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சேவையில் இருக்கும் கிராம சுகாதார செவிலியர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

அவை பரிசீலிக்கப்பட்டு 20 சிறந்த செவிலியர்களுக்கு மே 5-ஆம் தேதி சென்னையில் விருது வழங்கப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு 97104 85295 என்ற எண்ணையோ அல்லது mahali@mahali.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.